**சனாதிபதி நிதியம்**

# அறிவுறுத்தல் பத்திரம்

## க.பொ.த.(உ.த.) கற்பதற்காக சனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில்களுக்கான விண்ணப்பங்களைக் கோருதல்

### தகைமைகள்

- விண்ணப்பதாரரின் குடும்ப மாத வருமானம் ரூ.100,000/- வினை விஞ்சாதிருத்தல் வேண்டும்.
- அரச பாடசாலைகள் அல்லது கட்டணமற்ற தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவனாக/மாணவியாக இருத்தல் வேண்டும்.
- 2022(2023) ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட க.பொ.த.(சா.த.) பரீட்சையில் முதற்தடைவையாகத் தோற்றி 2025 ஆம் ஆண்டில் க.பொ.த.(உ.த.) கற்பதற்கான முழுத் தகைமைகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

### விண்ணப்பப்படிவத்தினைப் பூர்த்தி செய்தல்

- விண்ணப்பப்படிவத்தில் இலக்கம் 01 முதல் 06 வரையான பகுதி விண்ணப்பதாரரால் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.
- எப்பொழுதும் உண்மையான தகவல்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.
- குறுந்தகவல் அனுப்பக்கூடிய தொலைபேசி இலக்கமொன்றைக் குறிப்பிடுதல் வேண்டும். உங்களிடம் அவ்வாறான தொலைபேசி இலக்கமொன்று இல்லையாயின் அவர்களின் இணக்கப்பாட்டுடன் நெருங்கிய குடும்ப உறவினர் ஒருவரின்/பாடசாலை ஆசிரியரின்/அதிபரின் தொலைபேசி இலக்கத்தினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- உரிய வினாக்களுக்குரிய புள்ளிகள் வழங்குதல் விண்ணபதாரியினாலேயே மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன் உரிய பெறுபேறுகள் உண்மையானவை என்று அதிபர் சான்றளித்தல் வேண்டும்.
- குடும்ப வருமானம் தொடர்பாக தாம் வசிக்கும் பிரதேசத்தின் கிராம அலுவலரின் சான்றிதழ், பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் (வருமான விபரத்தினைப் பெற்றுக்கொள்ளல் அவசியமன்று) **பூர்த்திசெய்யப்பட்ட விண்ணபத்தினை நீங்கள் க.பொ.த.(சா.த.) கற்ற பாடசாலை அதிபரிடம் மாத்திரம் ஒப்படைத்தல் வேண்டும்.**
- அதிபரினால் மாத்திரம் உரிய விண்ணப்பங்கள் பட்டியலிடப்பட்டு பாடசாலைக்குரிய வலயக் கல்விக் காரியாலயத்திற்கு கையளிக்கப்படுதல் வேண்டும்.
- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பங்களை சனாதிபதி அலுவலகத்திற்கு அல்லது சனாதிபதி நிதியத்திற்கு கையளித்தல் அல்லது தபாலில் அனுப்புதல் மேற்கொள்ளப்படலாகாது.

### 01. மதிப்பெண் வழங்கும் முறை

| | | |
|---|---|---|
| 01.01. | குடும்பத்தின் 21 வயதிற்குட்பட்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிள்ளைகள் இருத்தல் | -04 புள்ளி |
| 01.02. | பெற்றோர் இருவரையும் இழந்திருத்தல் | -06 புள்ளி |
| 01.03. | பெற்றோர் இல்லாது பாதுகாவலருடன் இருத்தல் | -03 புள்ளி |
| 01.04. | பெற்றோரில் ஒருவரை இழந்திருத்தல் | -02 புள்ளி |
| 01.05. | மாணவன்/மாணவி முழுமையாக அங்கவீனமுற்று இருத்தல் | -10 புள்ளி |

(பகுதியளவில் அங்கவீனமுற்றிருந்தால் 05 புள்ளிகள் மாத்திரம் வழங்கவும்)

(ஆகக் கூடிய புள்ளிகள் 25)

குறிப்பு:- பெற்றோரில் தங்கிவாழும் 21 வயதிற்குற்பட்ட திருமணமாகாதவர்கள் பிள்ளைகளாக கருதப்படுகிறார்கள். உடல் குறைபாடுகள் தொடர்பில் அரச மருத்துவ உத்தியோகத்தர் சான்றளித்தல் வேண்டும்.

**சனாதிபதி நிதியம்**

**02. க.பொ.த.(சா.த.) பரீட்சையின் கட்டாய பாடங்களுக்கு**

| | | |
|---|---|---|
| அதி விசேட சித்தி | (A) | - 08 புள்ளி |
| விசேட சித்தி | (B) | - 06 புள்ளி |
| திறமைச் சித்தி | (C) | - 04 புள்ளி |
| சாதாரண சித்தி | (S) | - 02 புள்ளி |

தொகுதிப் பாடங்கள் தொடர்பில் ஒரு பாடத்திற்கு 01 புள்ளி வீதம் ஆகக்கூடியது 02 பாடங்களுக்கு இரண்டு புள்ளிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

(ஆகக் கூடிய புள்ளிகள் 50 )

**03. விளையாட்டு**

கரப்பந்தாட்டம்/ வலைப்பந்தாட்டம்/ கால்பந்தாட்டம்/ கூடைப்பந்தாட்டம்/ கிரிக்கெட்/ எல்லே/ பட்மிட்டன்/ கபடி/ றகர்/ ஹொக்கி/ மெய்வல்லுநர் விளையாட்டு/ செஸ்/ கரம்/ டென்னிஸ்/ நீச்சல்/ ஜிம்னாஸ்டிக்/ கராத்தே/ மேசைப்பந்தாட்டம் அல்லது வேறு

| | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|
| • முதலாமிடம் | 05 | 07 | 09 |
| • இரண்டாமிடம் | 04 | 05 | 08 |
| • மூன்றாமிடம் | 02 | 03 | 06 |
| • தலைமைத்துவம் | 01 | 01 | 01 |

(ஆகக் கூடிய புள்ளிகள் 10)

**04. அழகியல் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

தேசிய மொழிகள் மற்றும் இலக்கியப் போட்டிகள்/ விவாதங்கள்/ பேச்சு/ அறிவிப்பாளர்/ அறிவுப்போட்டி/ ஓவியம்/ நடனம்/ இசைக்கருவி இசைத்தல்/ பாடல்/ மேடை நாடகம்/ விடய சாதனைகள்/மாணவ படையணி/ சாரணர்/ முதலுதவி/ சூழலியல் சார்ந்தவை/ வேறு

| | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|
| • முதலாமிடம் | 05 | 07 | 09 |
| • இரண்டாமிடம் | 04 | 05 | 08 |
| • மூன்றாமிடம் | 02 | 03 | 06 |
| • தலைமைத்துவம் | 01 | 01 | 01 |

(ஆகக் கூடிய புள்ளிகள் 10)

**05.மாணவர் தலைமைத்துவம்**

| | |
|---|---|
| பாடசாலை முதன்மை மாணவ தலைவர் /<br>உப முதன்மை மாணவ தலைவர் | - 05 புள்ளி |
| மாணவ தலைவர் ( சிரேஷ்ட/கனிஷ்ட) | - 04 புள்ளி |
| வகுப்புத் தலைவர் | - 02 புள்ளி |

(ஆகக் கூடிய புள்ளிகள் 05)

**கவனிக்கவும் :-**

• மேலே உள்ள 03 மற்றும் 04 இல், ஒரே இணைப்பாடவிதான செயற்பாட்டிற்காக தேசிய, மாகாண மற்றும் வலயம் ஆகிய அனைத்து மட்டங்களிற்கும் புள்ளிகள் வழங்கப்படலாகாது. புள்ளிகள் வழங்கப்படும் போது மேற்குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி மட்டங்கள் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

• மேற்குறிப்பிட்ட 05 இல் புள்ளிகள் வழங்கும் போது ஆகக்கூடிய புள்ளி மட்டங்கள் மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.